II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 113 of 2024**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : | Age | : |
| Father's / Husband's Name | : | | : |
| Taluk | : | Distict | : |

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் வழக்கு சொத்தில் 1/4 பாகம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அதே போல் கிரைய ஆவணம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணமும் செல்லாது என்றும் பரிகாரம் கேட்டிருக்கிறேன். 2ம் பிரதிவாதி சரவணன் எனது தம்பி. திலகம் சரவணனின் மனைவி என்றால் சரிதான். வழக்கு சொத்தை என் தந்தை கதிரேசன் தான் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அவர் இறப்பதற்கு முன்பு 2ம் பிரதிவாதியிடம் தான் இருந்தார் என்றால் சரிதான். அவருடைய வருமானத்தில் அவர் வாழ்ந்துவந்தார். என் தந்தைதான் அவருடைய பிள்ளைகள் அனைவருக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். எனது பெற்றோர் உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது மருத்துவமனையில் வைத்து 2ம் பிரதிவாதி தான் பார்த்து கொண்டார் என்றால் GH ல் வைத்து பார்த்து கொண்டார். என் தந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. என் பெற்றோர் உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது 1ம் பிரதிவாதியின் 42 சவரன் நகைகளை விற்று 2ம் பிரதிவாதி தான் பார்த்து கொண்டார் என்றால் சரியல்ல. என்

தந்தைக்கு பென்ஷன் வருகிறது. அவருடைய பணத்தில் பார்த்து கொண்டார். எனது பெற்றோரை 19 வருடங்களாக 2ம் பிரதிவாதி தான் பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு வருமானம் இல்லாததால் அவர் தான் என் பெற்றோருடன் வசித்து வந்தார். என் பெற்றோரை பராமரித்ததால் அவர்கள் வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதிக்கு 23.09.2021 ல் விற்றுவிட்டனர் என்றால் சரியல்ல.

(இந்நிலையில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)